செய்தி வெளியீட்டு எண்: 018 நாள்: 20.01.2021

# 4 சட்டமன்ற தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கிரண் குராலா இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்குட்பட்ட **4** சட்டமன்ற தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பெயா் பட்டியலை அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலா் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கிரண் குராலா இ.ஆ.ப.,அவர்கள் இன்று (20.01.2021) வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட இடங்களில் 01.01.2021 தேதியை தகுதி ஏற்பு நாளாகக் கொண்டு வாக்காளர் பெயா் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தப் பணி 16.11.2020 முதல் 15.12.2020 வரை 18 வயது நிரம்பியவர்கள் மற்றும் அதற்கு மேல் உள்ள வாக்காளர் பெயர்களை சேர்த்தல், நீக்கல், திருத்தம் பணி மேற்கொள்ளப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன்படி, 16.11.2020 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள மொத்த ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கை **5,43,472,** பெண் வாக்காளர்கள் **5,36,751** மற்றும் இதர வாக்காளர்கள் **202** ஆக மொத்தம் **10,80,525** ஆகும். இதில் படிவம்-7 மூலம் நீக்கம் கோரியவர்கள், இறந்தவர்கள், குடிபெயர்ந்தவர்கள், இரண்டு இடங்களில் பெயர் உள்ளவர்கள் ஆகியவை மூலம் நீக்கப்பட்ட ஆண் வாக்காளர்கள் **2,586**, பெண் வாக்காளர்கள் **2,032** மற்றும் இதர வாக்காளர்கள் **7** என மொத்தம் **4,595** வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர் தற்போது நடைபெற்ற சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தின்படி படிவம்-6இன் மூலம் புதிதாக சேர்க்கப்பட்ட ஆண் வாக்காளர் எண்ணிக்கை **17,478**, பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை **20,552** மற்றும் இதர வாக்காளர்கள் எண்ணிக்கை **16** என கூடுதலாக **38,046** வாக்காளர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர்

இன்று வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின்படி 77.உளுந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆண் வாக்காளர்கள் **1,47,666**, பெண் வாக்காளர்கள் **1,45,115** இதர வாக்காளர்கள் **48** பேர் ஆகமொத்தம் **2,92,829** வாக்காளர்கள், 78.ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மொத்த ஆண் வாக்காளர்கள் **1,35,549**, பெண் வாக்காளர்கள் **1,31,923** மற்றும் இதர வாக்காளர்கள் **59** என மொத்தம் **2,67,531** வாக்காளர்கள். 79.சங்கராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மொத்த ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கை **1,33,498**, பெண் வாக்காளர்கள் **1,34,380** மற்றும் இதர வாக்காளர்கள் **48** என மொத்தம் **2,67,926** வாக்காளர்கள், மற்றும் 80.கள்ளக்குறிச்சி (தனி) சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மொத்த ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கை **1,41,681**, பெண் வாக்காளர்கள் **1,43,953** மற்றும் இதர வாக்காளர்கள் **56** என மொத்தம் **2,85,690** வாக்காளர்கள் உள்ளனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 77.உளுந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட **337** வாக்குச்சாவடி மையங்கள், 78.ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட **305** வாக்குச்சாவடி மையங்கள், 79.சங்கராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட **300** வாக்குச்சாவடி மையங்கள், 80.கள்ளக்குறிச்சி (தனி) சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட **330** வாக்குச்சாவடி மையங்கள் என மொத்தம் **1,272** வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன. ஆண் வாக்காளர்கள் **5,55,371**, பெண் வாக்காளர்கள **5,58,394** மற்றும் இதர வாக்காளர்கள் **211** என மொத்தம் **11,13,976** வாக்காளர்கள் உள்ளனர்.

இன்று வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியல் (1) கள்ளக்குறிச்சி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், (2) வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், (3) உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள், (4) உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் நகராட்சி அலுவலகம் கள்ளக்குறிச்சி மற்றும் நியமன வாக்குச்சாவடி அமைவிடங்கள் ஆகிய இடங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 2021 வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தப் பணி 20.01.2021 முதல் தொடர்ந்து நடைபெறும். பொதுமக்கள் தங்களது கோரிக்கை மனுக்களை உரிய படிவத்தில் அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர், உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர் ஆகியோரிடம் தெரிவிக்கலாம். மேலும், புதிதாக விண்ணப்பிக்க உள்ள வாக்காளர்கள் இந்திய தேர்தல் ஆணைய இணையதளம் முகவரியான **www.nvsp.in** வாயிலாகவும் விண்ணப்பிக்கலாம்.

மேலும், பொதுமக்கள் வாக்காளர் பட்டியல் தொடர்பாக தகவல் எதுவும் தேவைப்பட்டால் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் செயல்படும் வாக்காளர் சேவை மையத்தின் **1950** என்ற தொலைபேசியில் எண்ணில் தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட வாக்காளர்கள் தங்களது வாக்காளர் பெயர்கள் பதிவு செய்யப்பட்டதை உறுதி செய்ய இந்திய தேர்தல் ஆணைய இணையதள முகவரியான **www.nvsp.in** வாயிலாகவும் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கள்ளக்குறிச்சி சார் ஆட்சியர் திரு.எச்.எஸ்.ஸ்ரீகாந்த்,இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.சங்கீதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.டி.சுரேஷ், தனி வட்டாட்சியர் (தேர்தல்).திரு.க.மணிகண்டன் மற்றும் வட்டாட்சியர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்

<u>செய்தி வெளியீடு:</u>

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.